# COVID-19 தடுப்பூசிகள் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம்
## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

Vaccinate WA
CovidVaccineWA.org

COVID- 19 தடுப்பூசிகள் இனப்பெருக்க ஆரோக்கியத்தை எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பதைப் பற்றிய கவலைகள் இருப்பது இயல்பானது. தற்போது கர்ப்பமாக முயற்சிப்பவர்கள் அல்லது எதிர்காலத்தில் கர்ப்பமாகக்கூடியவர்கள் உட்பட 6 மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து வயதினரும் COVID-19 தடுப்பூசிகள் செலுத்திக்கொள்ள Centers for Disease Control and Prevention (CDC, நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள்) பரிந்துரைக்கிறது. COVID-19 தடுப்பூசிகள் உட்பட எந்த தடுப்பூசிகளும் தற்போது அல்லது எதிர்காலத்தில் கருவுறுதல் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதற்கு தற்போது எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

கருவுறுதல் சம்பந்தமான பழைய பிரச்சனைகள், நிற இனவெறியினால் ஏற்பட்ட மன அதிர்ச்சிக்கான வரலாறு, அல்லது உடல்நலப் பிரச்சனைகளைச் சரியாக கவனிக்காத பெண்கள்/திருநம்பிகள் மற்றும் மருத்துவத்துறையில் உள்ள பெண்கள்/பாலினத்தை உறுதி செய்யாதவர்கள் இந்த ஆவணத்தில் உள்ள தலைப்புகளைப் படிக்கும்போது உணர்ச்சி வசப்படக்கூடும்.

**COVID-19 தடுப்பூசி மற்றும்இனப்பெருக்க ஆரோக்கியம்பற்றியசிலபொதுவானக் கேள்விகளுக்கானபதில்களைப்பற்றி அறியகீழே பார்க்கவும்.**

### கே: COVID-19 தடுப்பூசி செலுத்திக் கொள்ளுவதால் குழந்தைகள் பெற்றுக்கொள்வதற்கான எனது திறன் பாதிக்கப்படுமா?

ப: பாலினத்தைப் பொருட்படுத்தாமல், COVID-19 தடுப்பூசிகள் உட்பட எந்தவொரு தடுப்பூசியும் கருவுறுதலைப் பாதிக்கும் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை. தடுப்பூசிகள் உங்கள் உடலின் நோயெதிர்ப்பு அமைப்புடன் இணைந்து கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடுகின்றன, அவை உங்கள் இனப்பெருக்க உறுப்புகளைப் பாதிக்காது. COVID-19 தடுப்பூசிகளின் மருத்துவப் பரிசோதனைகளிலும், கருத்தரிக்க முயற்சிக்கின்ற தம்பதிகளைப் பற்றிய பரந்த எதிர்கால ஆய்விலும், COVID-19 தடுப்பூசிகளைப் பெறுபவர்களுக்கும் தடுப்பூசிகளைப் பெறாதவர்களுக்கும் கர்ப்பம் தரிக்கும் விகிதம் ஒரே மாதிரியாக இருந்தது. COVID-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை மற்றும் செயலாக்கம் உள்ளவை. Centers for Disease Control and Prevention (CDC), American College of Obstetricians and Gynecologists (ACOG, அமெரிக்க மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவக் கல்லூரி) மற்றும் Society for Maternal-Fetal Medicine (SMFM, தாய்-சேய் மருத்துவ அமைப்பு)கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்கள் அல்லது கர்ப்பம் தரிக்க திட்டமிட்டுள்ளவர்களுக்கும் COVID-19 தடுப்பூசியைப் பரிந்துரை செய்கிறது.

COVID தடுப்பூசி ஏன் பரிந்துரைக்கப்படுகிறது என்பதைப் பற்றி டாக்டர் LaSalle கூறுவதைக் கேட்க, இந்த இணைப்பைப் பார்வையிடவும்: கருவுறுதல் மற்றும் COVID-19 தடுப்பூசிகள் - YouTube

### கே: தடுப்பூசி என் மாதவிடாய் சுழற்சியில் ஏதேனும் மாற்றத்தை ஏற்படுத்துமா?

ப: COVID-19 தடுப்பூசி செலுத்திய நபர்களில் ஒரு பகுதியினர் தடுப்பூசி செலுத்திய பிறகு அவர்களின் மாதவிடாய் சுழற்சியில் ஏற்பட்ட, நீண்ட மாதவிடாய், குறுகிய இடைவெளிகளைக் கொண்ட மாதவிடாய்கள் அல்லது வழக்கத்தை விட அதிகமாக ஏற்பட்ட இரத்தப்போக்கு.மாற்றங்களைப் பற்றிக் கூறியுள்ளனர். 2022 ஆய்வில், COVID-19 தடுப்பூசி டோஸை எடுத்துக்கொண்ட நேரத்தில், அவர்களின் மாதவிடாய் சுழற்சியின் நீளத்தில் ஒரு நாள் குறைவாக இருந்தது என்பது கண்டறியப்பட்டது. மாதவிடாய் சுழற்சியின் இயல்பான வரம்பு மாறுபாட்டில் ஒரு நாள் மாறுபாடு உள்ளது. மாதவிடாய் சுழற்சியில் இந்தகைய சாத்தியமான தற்காலிக மாற்றங்கள் இருந்தாலும், **COVID-19 தடுப்பூசிகள் கருவுறுதல் பிரச்சனைகளை ஏற்படுத்தும் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை.** உங்கள் மாதவிடாய் சுழற்சியில் ஏற்படும் மாற்றம் உங்கள் அண்டவிடுப்பின் நேரத்தை மாற்றக்கூடும். இயற்கை முறையில் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் மாதவிடாய் சுழற்சி கண்காணிப்பைப் பயன்படுத்தும் பிற முறைகளைப் பயன்படுத்துபவர்களுக்கு அண்டவிடுப்பைக் குறிப்பது மற்றும் கர்ப்பத்தைத் தவிர்ப்பது/திட்டமிடுவது மிகவும் கடினமாக இருக்கலாம். உங்கள் மாதவிடாய் சுழற்சியைப் பற்றி உங்கள் வழங்குநருடன் கலந்துரையாடுங்கள் மேலும் குடும்பக் கட்டுப்பாடு பற்றியும் அறிந்துகொள்ளுங்கள்.

### கே: COVID-19 தடுப்பூசி பிறப்புக் கட்டுப்பாட்டைப் பாதிக்குமா?

ப: Planned Parenthood கூறுவதன்படி, COVID-19 தடுப்பூசி பிறப்புக் கட்டுப்பாட்டை அதிக அல்லது குறைந்த பயனுள்ளதாக மாற்றுகிறது என்பதற்கான எவ்வித ஆதாரமும் இல்லை. இந்த நேரத்தில், தடுப்பூசி செலுத்திய நபர்களிடமிருந்து அவர்களின் பிறப்புக் கட்டுப்பாடு தடுப்பூசி செலுத்திய பிறகு வேலை செய்வதை நிறுத்தியதாக எந்தவித புகாரும் இல்லை. மாதவிடாய் சுழற்சியில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய புகார்கள் இருந்தாலும், ஒரு நபரின் பிறப்புக் கட்டுப்பாடு சிறப்பாகச் செயல்படுவதை இது பாதிக்காது. இது மாதவிடாய் சுழற்சிகள் மற்றும் அண்டவிடுப்பின் காலங்களைக் கண்காணிப்பதில் சிரமத்தை ஏற்படுத்தலாம்; கருவுறுதல் விழிப்புணர்வு முறை போன்ற இயற்கையான பிறப்புக் கட்டுப்பாட்டைப் பயன்படுத்துபவர்கள், எப்போது கருவுறுகிறார்கள் என்பதைப் பற்றி அறிவது கடினமாக இருக்கலாம். தனிநபர்கள், தங்கள் அண்டவிடுப்பைக் கண்காணிப்பதற்கு உதவும் கருவிகள் உள்ளன. உங்கள் விருப்பத் தேர்வுகளையும், இவற்றைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளவும் உங்கள் வழங்குநரிடம் கலந்தாலோசிப்பது பரிந்துரைக்கப்படுகிறது.

## கே: தடுப்பூசி விந்தணுக்களைப் பாதிக்குமா மற்றும்/அல்லது ஆண்மைக்குறைவை ஏற்படுத்துமா?

**ப:** தற்போது, COVID-19 தடுப்பூசிகள் உட்பட எந்தவொரு தடுப்பூசியும், மலட்டுத்தன்மை அல்லது ஆண்மைக்குறைவு போன்ற ஆண் இனப்பெருக்க உறுப்புகள் உள்ளவர்களுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதற்கான எவ்வித ஆதாரமும் இல்லை. mRNA COVID -19 தடுப்பூசி செலுத்தப்பட்ட 45 ஆரோக்கியமான ஆண்களின் மீதான சமீபத்திய ஆய்வுவிந்தணுக்களின் அளவு மற்றும் இயக்கம் போன்ற பண்புகளைத் தடுப்பூசிக்கு முன்னும் பின்னும் ஆய்வு செய்தது. தடுப்பூசி செலுத்திய பிறகு இந்த விந்தணு பண்புகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறியவில்லை. மாற்றாக, ஒரு ஆய்வு COVID-19 நோய்த்தொற்றுக்குப் பிறகான 60 நாட்கள், ஆண்களின் கருவுறுதல் குறைவுக்குத் தொடர்புடையதாக இருக்கலாம் என்று கண்டது. எந்தவொரு நோயிலிருந்தும் ஏற்படும் காய்ச்சல், மற்றும் COVID-19 இன் பொதுவான அறிகுறி, குறுகிய காலத்திற்கு விந்தணுவின் உற்பத்தியைக் குறைக்கும். COVID-19 தடுப்பூசியினால் ஏற்படும் பக்க விளைவு தான் காய்ச்சல் என்றாலும், COVID-தடுப்பூசிக்குப் பிறகு ஏற்படும் காய்ச்சல் விந்தணு உற்பத்தியை பாதிக்கும் என்பதற்கு தற்போதைய ஆதாரம் இல்லை. உங்களுக்கு மேலும் ஏதேனும் பிரச்சனைகள் இருந்தால் உங்கள் வழங்குநரிடம் பேசுங்கள்.

## கே: தடுப்பூசி IVF (ஆய்வுகூடச் சோதனை முறை கருக்கட்டல்) சிகிச்சையை பாதிக்கிறதா?

**ப:** COVID-19 தடுப்பூசி, IVF சிகிச்சைகளை மேற்கொள்ளும் நபர்களின் விளைவுகளைப் பாதிக்கும் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. COVID-19 mRNA தடுப்பூசி, IVF வெற்றி விகிதங்களில் எந்தவிதமான விளைவையும் ஏற்படுத்தாது என்று ஆய்வுகள் கண்டறிந்துள்ளன. தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத மற்றும் தடுப்பூசி செலுத்திக் கொண்ட நோயாளிகளுடன் ஒப்பிடும்போது, கருப்பை தூண்டுதல், முட்டையின் தரம், கரு வளர்ச்சி அல்லது கர்ப்ப விளைவு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் எதுவும் இல்லை என்று ஒரு ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. COVID-19 தடுப்பூசிகள் கருவுறுதலைப் பாதிப்பதாகவோ அல்லது ஏற்கனவே கருத்தரிக்க சிரமப்படுபவர்களுக்கு அதிகப் பிரச்சனைகளை உருவாக்குவதாகவோ கண்டறியப்படவில்லை. ஃப்ளூ, டெட்டனஸ் மற்றும் டிஃப்தீரியா தடுப்பூசிகள் போன்ற பல தடுப்பூசிகள் வழக்கமாக கர்ப்ப காலத்திலும் அதற்கு முன்பும் பாதுகாப்பாக வழங்கப்படுகின்றன. கருத்தரிக்க முயற்சிப்பவர்கள் உட்பட 6 மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினர்களுக்கு COVID-19 தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது.

## கே: COVID-19 தடுப்பூசி கருச்சிதைவை ஏற்படுத்துமா?

**ப:** இல்லை, கர்ப்பகாலத்திற்கு முன்பு, கர்ப்பகாலத்தின் போது மற்றும் அதற்கு பின்பும் COVID-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை. COVID-19 தடுப்பூசிகளைச் செலுத்திக்கொள்வது கருச்சிதைவு அபாயத்தை அதிகரிக்கிறது என்பதற்கான எந்தவித ஆதாரமும் இல்லை. COVID-19 க்கு எதிராக தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களில் கருச்சிதைவு விகிதங்கள் அதிகமாகக் கண்டறியப்படவில்லை.

கருச்சிதைவு விகிதம் மக்கள் நினைப்பதை விட அதிகமாக உள்ளது, சுமார் 10 முதல் 20 சதவீதம் நபர்களின் கர்ப்பம் கருச்சிதைவில் முடிவடைகிறது. தடுப்பூசி செலுத்திக்கொண்ட சிலருக்கு கருச்சிதைவு ஏற்படலாம், ஆனால் இது தடுப்பூசியுடன் தொடர்புடையது அல்ல - தடுப்பூசி நிலையைப் பொருட்படுத்தாமல் கருச்சிதைவுகள் ஏற்படலாம். உண்மையில், கர்ப்பகால துவக்கத்தில் தீவிர COVID-19 நோய்த்தொற்று உருவாகும் நபர்கள் கருச்சிதைவு ஏற்படும் அபாயத்தில் உள்ளனர். COVID-19க்கு எதிராகத் தடுப்பூசி போட்டுக்கொள்வதே உங்களுக்கும், உங்கள் குழந்தைக்கும் சிறந்த பாதுகாப்பு.

## ஆதார வளங்கள்


Centers for Disease Control and Prevention, "COVID-19 Vaccines for People Who Would Like to Have a Baby". 2022. இங்கே ஆன்லைனில் கிடைக்கிறது: COVID-19 Vaccines for People Who Would Like to Have a Baby | CDC

American College of Obstetricians and Gynecologists, "COVID-19 Vaccination Considerations for Obstetric-Gynecologic Care". 2022. இங்கே ஆன்லைனில் கிடைக்கிறது: COVID-19 Vaccination Considerations for Obstetric–Gynecologic Care | ACOG

World Health Organization, "Questions and Answers: COVID-19 vaccines and pregnancy." 2022. இங்கே ஆன்லைனில் கிடைக்கிறது: Questions and Answers: COVID-19 vaccines and pregnancy (who.int)

Mount Sinai, "Large Study Provides Reassurance that COVID-19 Vaccination Does Not Affect Fertility or Early Pregnancy." 2022. இங்கே ஆன்லைனில் கிடைக்கிறது: Large Study Provides Reassurance that COVID-19 Vaccination Does Not Affect Fertility or Early Pregnancy | Mount Sinai - New York


***தனிப்பட்ட மருத்துவ முடிவுகளை எடுக்கும்போது எப்போதும் உங்கள் நம்பகமான சுகாதார நிபுணருடன் கலந்தாலோசிக்கவும்.***




இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.